தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(இடைநிலை) செயல்முறைகள்,
சென்னை - 600 006

ந. க. எண். 011515/ பிடி1 / இ3 / 2022, நாள்.29.12 .2022

-----

பொருள் : பள்ளிக் கல்வி - அடல் டிங்கரிங் ஆய்வகம் (ATL) - 2022-23 கல்வியாண்டில் நிதி ஆயோக் மூலமாக நிதி பெறப்பட்ட பள்ளிகள் விவரங்கள் கோருதல் - சார்பு

பார்வை : 1. பள்ளிக் கல்வித் துறை, அரசுக் கடிதம் எண்: 3902/Bud-1/2022, நாள்:04.03.2022

2. இவ்வாணையரக இதே எண்ணிடப்பட்ட செயல்முறைகள், நாள்: 20.12.2022

********

2022-23 கல்வியாண்டில் புதிதாக அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அமைக்க நிதி ஆயோக் மூலமாக நிதி பெறப்பட்டுள்ள பள்ளிகள் விவரங்களை 22.12.2022 தேதிக்குள் இவ்வாணையரக "பிடி1 பிரிவு" மின்னஞ்சல் (pd1sec.dse@gmail.com) முகவரிக்கு அனுப்பிடுமாறும், முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பமிட்ட பிரதியினை ஒரு வார காலத்திற்குள் இவ்வாணையரகத்திற்கு கிடைத்திடும்படி அனுப்பிடுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இதுநாள் வரை பல மாவட்டங்களில் இருந்து உரிய விவரங்கள் பெறப்படவில்லை. இத்திட்டம் சார்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டியுள்ளதால் இப்பணியின் முக்கியத்துவம் அறிந்து வீண் காலதாமதத்தினை தவிர்த்து உரிய விவரங்களை உடன் அனுப்பிடுமாறு சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

-ஓம்/-

இணை இயக்குநர் (இடைநிலை)

இணைப்பு: படிவம்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்